1983 பிப்ரவரி 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே அதுபற்றி பல தடவை நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே ஓரளவுக்கு இருப்பு இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாம் கொள்முதலை தீவிரப்படுத்தவேண்டிய அவசியம் வந்து தஞ்சை மாவட்டத்தில் தனியார் வியாபாரிகள் யாரும் கொள்முதல் செய்யக்கூடாது என்றும் அரசு நுகர்பொருள் வாணிபக் கழகம் மட்டுமே கொள்முதல் செய்யும் என்றும் போட்டிருக்கிறோம். இதெல்லாம் அரசினிடத்திலே இருப்பு அதிகமாக ஆகவேண்டும் என்ற காரணத்தால்தான். மேலும் மத்திய அரசு சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் தந்ததைப் போன்று அவர்களுடைய இருப்பில் இருந்து தொடர்ந்து கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும் என்றும் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது நியாய விலைக் கடைகளுக்கு நாம் 70 பைசா மானியம் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் பல கடைகளில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு போன்ற மாவட்டங்களில் உள்ள பல கடைகளில் ஏழைகளுக்கு அரிசி கொடுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ? அதைப்பற்றி கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளின் மூலமாக நாம் வழங்குகின்ற அரிசி மாதத்திற்கு மாதம் ஏறுகிறது என்றுதான் நாம் குறிப்பிட்டுச் சொன்னோம். எனவே அந்த அளவுக்குக் கொடுக்கப்படுகின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று எங்கேயாவது தட்டுப்பாடு இருக்குமேயானால் இருக்கின்ற அரிசியினைத்தான் நாம் எல்லா மாவட்டத்திற்கும் வினியோகம் செய்துகொண்டு வருகிறோம். நம்முடைய கணக்குப்படி மார்ச் மாதம் இறுதி வரையிலும் நமக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசி வழங்குவதற்கு இருப்பு இருக்கின்றது என்ற கணக்கின் அடிப்படையில் பல்வேறு மாவட்டங்களுக்கு நாம் அனுப்பி வைத்து நியாய விலைக் கடைகளின் மூலமாக அளிக்கின்ற முயற்சியினை மேற்கொண்டிருக்கிறோம். எங்கேயாவது தட்டுப்பாடு இருக்குமேயானால் உடனடியாகக் கவனித்து அந்த இடங்களில் அரிசித் தட்டுப்பாடு இல்லாமல் செய்வதற்கு அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நாளுக்கு நாள் அந்த அரிசியின் அளவு அதிகமாகிக் கொண்டு வருகின்றது என்று சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே கிராமப்புறங்களில் அந்த அளவுக்கு கொடுக்கவில்லை. அரிசியின் அளவு

நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது. கொடுக்கப்படுகின்ற அரிசியும் தரமானதாக இல்லை. ஒருவகையான துர்நாற்றம் அடிக்கக்கூடிய அரிசியாகத்தான் அது இருக்கின்றது. எனவே அந்த நிலைமையினை மாற்றி நல்ல வகையிலே வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் அதிகரிக்கப்படும் என்று நான் சொல்லவில்லை. இருக்கின்ற அளவினை ஒழுங்காகக் கொடுத்துக்கொண்டு வந்தால் போதும் என்று தான் இருக்கிறோம். மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்தினருக்கு 20 கிலோ அரிசி தர வேண்டும் என்பதற்கு குறையாமல் இருப்பதற்கான வழிமுறைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். நாம் இங்கே பெறுகின்ற அரிசி, பிற மாநிலங்களில் இருந்து வாங்குகிற அரிசி, மத்திய அரசு நமக்கு ஒதுக்குகின்ற அரிசி ஆகியவற்றின் அடிப்படையில்தான் நாம் வழங்கிக்கொண்டு வருகிறோம்.

(முற்பகல் 9-20.)

பல ஆயிரக்கணக்கான டன் அரிசி உபயோகப்படுத்துகிறபோது சில பல இடங்களில் தரக்குறைவான அரிசி வந்துவிடுகிறது என்று குறிப்பிடுகிற நேரத்தில் உடனடியாக அதை மாற்றி தரமுள்ள அரிசி வழங்கவேண்டும் என்று பொதுவாக உத்தரவு இருக்கிறது. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அந்த மாதிரி சூழ்நிலை இருக்குமானால் அரசு அலுவலர்களைக் கொண்டு அந்தக் குறைபாட்டை நீக்க தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாம்பரம் தொகுதியிலுள்ள மேய்க்கால் புறம்போக்கு நிலம்.

*வினா எண். 162—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில், கோவிலம்பாக்கம் கிராமத்தில், புல எண். 435/1 மேய்க்கால் புறம்போக்கு சுமார் 45 ஏக்கர் நிலத்தில் திடீரென சிலர் குடிசைகள் போட்டு விற்பனை செய்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை உடனடியாக அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?